மாலை மலர் கோவை 3-7-2011




காருண்யா பல்கலைக்கழக மாணவர்கள் ரத்ததானம் செய்த காட்சி.

## டி.ஜி.எஸ். தினகரன் பிறந்த நாள்

# காருண்யா பல்கலைக் கழக மாணவர்கள் ரத்த தானம்

கோவை, ஜூலை. 3-

கோவை காருண்யா பல்கலைக் கழக நிறுவனர் டாக்டர். டி.ஜி.எஸ். தினகரனின் 76-வது பிறந்த நாள் நினைவுக் கூட்டம் காருண்யா பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்றது.

காருண்யா பல்கலைக் கழகம், காருண்யா சர்வதேச பள்ளி, இவாஞ்சலின் மேல் நிலைப் பள்ளி, காருண்யா - சீஷா சமுதாய மருத்துவமனை, பெதஸ்தா ஆகிய நிறுவனங்களிலிருந்து சுமார் 7000 - க்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு டி.ஜி.எஸ். தினகரனின் தியாக வாழ்வை நினைவு கூர்ந்தனர். டி.ஜி.எஸ். தினகரன் தனது இறை சொற்பொழிவாலும், தன்னலமற்ற கல்விப் பணியாலும், அன்பாலும், சாதி, இன,மத பேதமின்றி அனைத்து மக்களின் மனதிலும் நீங்கா இடம் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. டி.ஜி.எஸ். தினகரன் பிறந்த நாளை முன்னிட்டு காருண்யா பல்கலைக் கழக நாட்டு நலப் பணித் திட்டமும், சீஷா தொண்டு நிறுவனமும் இணைந்து ரத்த தான முகாம் நடத்தியது. காருண்யா சீஷா மருத்துவ மனையில் இந்த முகாம் நடந்தது.

காருண்யா பல்கலைக் கழக பதிவாளர் ஆனிமேரி பெர்ணான்டஸ் தொடங்கி வைத்தார். இதில் மாணவர்களும், ஆசிரியர்களும் உற்சாகமாக கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர்.

காருண்யா பல்கலைக் கழக நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் டி.ஜி.எஸ். தினகரனின் பிறந்த நாளை முன்னிட்டு பல்கலைக் கழக வளாகத்தில் பல்வேறு வகையான மரக்கன்றுகளை நட்டனர். இதற்கான ஏற்பாடுகளை விரிவாக்கத் துறை தலைவர் குரியன், நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜிம்ஸ் ஜான் வெஸ்லி மற்றும் ஆசிரியர்களும், மாணவர்களும் செய்திருந்தனர்.

# காருண்யா பல்கலை நிறுவனர் பிறந்த நாள் நினைவு கூட்டம்

**கோவை, ஜூலை 4:** கோவை காருண்யா பல்கலைக் கழக நிறுவனர் டாக்டர் டிஜிஎஸ் தினகரனின் 76வது பிறந்த நாள் நினைவு கூட்டம் பல்கலைகழக வளாகத்தில் நடந்தது. இதில் காருண்யா பல்கலைக்கழகம், காருண்யா சர்வதேச பள்ளி, இவாஞ்சலின் மேல்நிலைப் பள்ளி, காருண்யா- சீஷா சமுதாய மருத்துவமனை, பெதஸ்தா ஆகிய நிறுவனங்களில் இருந்து 7000 மாணவ, மாணவிகளும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

தினகரன் பிறந்த தினத்தை யொட்டி காருண்யா பல் கலைக்கழக நாட்டுநலப்பணித்திட்டம், சீஷா தொண்டு நிறுவனமும் இணைந்து ரத்ததான முகாமை காருண்யா சீஷா மருத்துவமனையில் நடத்தியது. பல்கலைக்கழக பதிவாளர் ஆனிமேரி பெர்னாண்டஸ் முகாமை துவக்கி வைத்தார். மாணவர்கள், ஆசிரியர்கள் ரத்ததானம் வழங் கினர். பல்கலைக்கழக வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை விரிவாக்கதுறை தலைவர் குரியன், நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப் பாளர் ஜிம்ஸ் ஜான் வெஸ்லி மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் செய்து இருந்தனர்.



# டி.ஜி.எஸ்.தினகரனின் பிறந்தநாள் கூட்டம்

கோவை, ஜூலை 2: காருண்யா பல்கலைக்கழக நிறுவனர் டி.ஜி.எஸ். தினகரனின் 76-வது பிறந்தநாள் நினைவுக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் காருண்யா பல்கலைக்கழகம், காருண்யா சர்வதேச பள்ளி, இவாஞ்சலின் மேல்நிலைப் பள்ளி, காருண்யா - சீஷா சமுதாய மருத்துவமனை, பெதஸ்தா ஆகிய நிறுவனங்களில் இருந்து சுமார் 7 ஆயிரம் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். இதையொட்டி நடைபெற்ற முகாமில் நூற்றுக் கணக்கான மாணவ மாணவிகள் ரத்த தானம் செய்தனர். மேலும், பல்கலைக்கழக வளாகத்தில் பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்பட்டன.



# டி.ஜி.எஸ். தினகரன் பிறந்தநாள் நினைவு கூட்டம்

## மாணவ-மாணவிகள் ரத்ததானம்

கோவை,ஜூலை.3-

காருண்யா பல்கலைக்கழக நிறுவனர் டி.ஜி.எஸ். தினகரனின் 76-வது பிறந்தநாள் நினைவு கூட்டம், காருண்யா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழகம், காருண்யா சர்வதேச பள்ளி, இவாஞ்சலின் மேல்நிலைப் பள்ளி, சீஷா சமுதாய மருத்துவமனை, பெதஸ்தா ஆகிய நிறுவனங்களில் இருந்து 7 ஆயிரத்துக்கும் மேலான மாணவ-மாணவிகள், ஆசிரியர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர். இதையொட்டி ரத்ததான முகாம் காருண்யா சீஷா மருத்துவமனையில் நடைபெற்றது. இந்த முகாமை பல்கலைக்கழக பதிவாளர் ஆனிமேரி பெர்னாண்டஸ் தொடங்கி வைத்தார். மாணவர்கள், ஆசிரியர்கள் இந்த முகாமில் கலந்துகொண்டு ரத்ததானம் செய்தனர். மேலும் மரக்கன்று நடும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விரிவாக்கத்துறை தலைவர் குரியன், நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜிம்ஸ் ஜான்வெஸ்லி ஆகியோர் செய்து இருந்தனர்.